**சுருக்கம்**

வனம் – சிவகங்கை மாவட்டம் – மானாமதுரை வட்டம் – 62–மேலப்பிடாவூர் கிராமம்–மேலப்பிடாவூர் வன வட்டாரம் – நில அளவை எண். 264–ல் உள்ள 78.30.5 எக்டர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைத்து அறிவிக்கை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம். 14) துறை**

**அரசாணை (நிலை) எண்.60**

**நாள்: 20.03.2023**
**சுபகிருது– பங்குனி, 06**
**திருவள்ளுவர் ஆண்டு–2054**
**படிக்க.:**

1. அரசாணை (நிலை) எண்.16, சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வனம்.14) துறை, நாள். 16.02.2018.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–15. கடித எண்.டிஎஸ்2/14227/2022, நாள். 03.08.2022.

=======

**ஆணை :**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், 62, மேலப்பிடாவூர் கிராமம், மேலப்பிடாவூர் வன வட்டாரம், நில அளவை எண். 264–ல் உள்ள 78.30.5 எக்டேர் எக்டர் நிலம் தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 16–ன் கீழான அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள் 19.04.2023–ல் ஆங்கிலத்திலும், சிவகங்கை மாவட்டம் அரசிதழ் நாள் 03.05.2023–ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

2. 19.04.2023–ந் தேதிய தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் சிவகங்கை மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு மதுரை அரசு கிளை அச்சக மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய, கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சுப்ரியா ஸாஹு**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

<u>பெறுநர்</u>
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 1.
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர், நில நிர்வாகம்,
சென்னை – 5.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்),
சென்னை – 32.
மாவட்ட ஆட்சியர், சிவகங்கை.
வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்,
திருவில்லிப்புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை.
மாவட்ட வன அலுவலர், சிவகங்கை.
வன நிர்ணய அலுவலர், சிவகங்கை.
<u>நகல்:</u>–
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD–IV) துறை,
சென்னை–9.
சட்டத் (Opinion) துறை, சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (மொழிபெயர்ப்பு)துறை,
சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை–9.
(கோ.எண்.14239/வனம்.14/2022)
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

N. Yini.
**பிரிவு அலுவலர்**
23/03/2022

**அரசு ஆணை (நிலை) எண்.60**
**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.14) துறை,**
**நாள். 20.03.2023–ன் இணைப்பு**

| வ. எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,<br>சென்னை –9. | 2 | 2 |
| 2 | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்<br>(வனத்துறைத் தலைவர்), சென்னை–32. | 3 | 3 |
| 3 | மாவட்ட ஆட்சியர், சிவகங்கை. | 2 | 2 |
| 4 | வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்,<br>திருவில்லிப்புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை | 5 | 5 |
| 5 | மாவட்ட வன அலுவலர், சிவகங்கை | 12 | 12 |
| 6 | வன நிர்ணய அலுவலர், சிவகங்கை. | 8 | 8 |

**சுப்ரியா ஸாஹு**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

N. [signature]

**பிரிவு அலுவலர்**
23/03/2023

**பிற்சேர்க்கை.**

**அறிவிக்கை.**

தமிழ்நாடு 1882–ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–ஆம் பிரிவினில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழே விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாற்புற எல்லைகளுக்குள் அடங்கிய நிலப் பகுதியை 20.09.2023–ஆம் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் காப்பு வனமாக இதனால் அறிவிக்கிறார்.

**விவர அட்டவணை.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | சிவகங்கை |
| 2. | வட்டத்தின் பெயர் | : | மானாமதுரை |
| 3. | கிராம எண் மற்றும் பெயர் | : | 62, மேலப்பிடாவூர் |
| 4. | வன வட்டாரத்தின் பெயர் | : | மேலப்பிடாவூர் வன வட்டாரம் |
| 5. | வன வட்டாரத்தின் மொத்தப்பரப்பு | : | 78.30.5 எக்டேர் |
| 6. | நில அளவை எண் | : | 264 |

**நாற்புற எல்லைகள்**

**வடக்கு.–** இவ்வன வட்டாரத்தின் எல்லையானது எண்.62, மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண்கள் 264, 225, மற்றும் எண்.92, மல்லல் கிராம நில அளவை எண்.226 ஆகியவை சந்திக்கும் முச்சந்தியில் தொடங்கி, பொதுவாக வடகிழக்குத் திசையில் சென்று, எண்.92, மல்லல் கிராம நில அளவை எண்கள் 226 மற்றும் 225–ன் தென்கிழக்கு பக்கமாகச் சென்று, எண்.62, மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண்.264, எண்.92, மல்லல் கிராம நில அளவை எண்.225 மற்றும் எண்.96, செம்பனூர் கிராம நில அளவை எண்.263 ஆகியவை சந்திக்கும் முச்சந்தியை புள்ளியை அடைகிறது. அங்கிருந்து இவ்வெல்லையானது, பொதுவாக கிழக்கு நோக்கி எண்.96, செம்பனூர் கிராம நில அளவை எண்கள்.263, 264, 265, 269, 270, 271, 272 மற்றும் 273 ஆகியவற்றின் தெற்குப் பக்கமாகச் சென்று, எண்.62, மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண். 264, எண்.96, செம்பனூர் கிராம நில அளவை எண்கள் 273 மற்றும் 2 ஆகியவை சந்திக்கும் முச்சந்தியை அடைகிறது.

**கிழக்கு.–** பின்னர் இந்த எல்லையானது, பொதுவாக தெற்கு நோக்கி எண்.96, செம்பனூர் கிராம நில அளவை எண்.2–ன் மேற்குப் பக்கமாகச் சென்று எண்.62. மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண்கள் 264, 302 மற்றும் எண்.96, செம்பனூர் கிராம நில அளவை எண்.2 ஆகியவை சந்திக்கும் முச்சந்தியை அடைகிறது.

**<u>தெற்கு</u>.–** பின்னர், இந்த எல்லையானது, பொதுவாக, மேற்குத் திசையை நோக்கி, எண்.62, மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண்.302–ன் வடக்குப் பக்கமாகச் சென்று எண்.62, மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண்கள் 277, 264, 302 மற்றும் 295 ஆகியவை சந்திக்கும் புள்ளியை அடைகிறது. அதன்பின், இவ்வெல்லையானது, பொதுவாக, வடமேற்கு, தென்மேற்கு மற்றும் மேற்கு திசையை நோக்கி எண்.62, மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண்.277–ன் கிழக்கு, வடகிழக்கு, வடமேற்கு மற்றும் வடக்குப் பக்கமாகச் சென்று, எண்.62, மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண்கள் 231, 264, 277 மற்றும் 232 ஆகியவை சந்திக்கும் புள்ளியை அடைகிறது. அதன் பின், இவ்வெல்லையானது, பொதுவாக, வடமேற்குத் திசை நோக்கிச் சென்று, எண்.62, மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண்கள் 231 மற்றும் 230 ஆகியவற்றின் வடக்குப் பக்கமாகச் சென்று, எண்.62, மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண்கள் 226, 264 மற்றும் 230 ஆகியவை சந்திக்கும் முச்சந்தியை அடைகிறது.

**<u>மேற்கு</u>.–** பின்னர், இந்த எல்லையானது, பொதுவாக, வடக்கு திசை நோக்கிச் சென்று எண்.62, மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண்கள் 226 மற்றும் 225 ஆகியவற்றின் கிழக்குப் பக்கமாகச் சென்று ஆரம்ப இடத்தை அடைகிறது.

**<u>அனுமதிக்கப்பட்ட உரிமைகள்</u>**

**<u>பின்வரும் மூன்று உரிமைகள் இவ்வனவட்டாரத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றன.</u>**

**<u>உரிமை எண்.1 : கால்வாய் 1:</u>**

இவ்வன வட்டாரத்தின் வழியே மழைநீரைக் கொண்டு சென்று புக்குளி கண்மாயில் சேர்க்கும் இக்கால்வாயைப் பயன்படுத்திக் கொள்ள பொதுப்பணித் துறைக்கும் ஊரக வளர்ச்சித் துறைக்கும் அனுமதியளிக்கப்படுகிறது. இக்கால்வாயானது, மேலப்பிடாவூர் வனவட்டாரத்தில் கிழக்கு எல்லையில் எண்.62, மேலப்பிடாவூர் கிராம நில அளவை எண்.264–ன் தென்மேற்கு மூலையிலிருந்து 190.00 மீட்டரில் தொடங்கி, தென்மேற்காகச் சென்று, புக்குளி கண்மாயின் மேற்குப் பக்கமாகச் சென்றடைகிறது. இக்கால்வாயை பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சிவகங்கை மாவட்ட வன அலுவலரிடம் எழுத்துப்பூர்வ முன்னனுமதி பெற்று, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது. இவ்வனவட்டாரத்திற்குள் இந்த கால்வாயின் மொத்த தூரம் 460.83 மீட்டர் மற்றும் அகலம் 8 மீட்டர் ஆகும். இவ்வனவட்டாரத்தின் காந்த கோண அளவுகள் மற்றும் தூர விவரங்கள் பின்வருமாறு:–

| தொடர் எண். | நிலையம் (ஆரம்பம் – முடிவு) | காந்த கோண அளவுகள் (பாகையில்) | நீளம்/தூரம் (மீட்டரில்) | கால்வாயின் அகலம் தூரம் (மீட்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | 1 to 2 | $218.11^0$ | 58.98 | 8.00 |
| 2 | 2 to 3 | $192.29^0$ | 125.58 | 8.00 |
| 3 | 3 to 4 | $222.72^0$ | 41.35 | 8.00 |
| 4 | 4 to 5 | $271.37^0$ | 129.22 | 8.00 |
| 5 | 5 to 6 | $295.93^0$ | 105.70 | 8.00 |
| | | **மொத்தம்** | **460.83** | |

**உரிமை எண். 2 : கால்வாய் 2:**

இவ்வன வட்டாரத்தின் வழியே மழைநீரைக் கொண்டு சென்று புக்குளி கண்மாயில் சேர்க்கும் இக்கால்வாயைப் பயன்படுத்திக் கொள்ள பொதுப்பணித் துறைக்கும் ஊரக வளர்ச்சித் துறைக்கும் அனுமதியளிக்கப்படுகிறது. இக்கால்வாயானது. மேலப்பிடாவூர் வனவட்டாரத்தின் கிராம நில அளவை எண்.264–ன் வடகிழக்கு மூலையிலிருந்து 30.00 மீட்டரில் தொடங்கி, தென்மேற்காகச் சென்று, புக்குளி கண்மாயின் வடகிழக்கு எல்லையை அடைகிறது. இக்கால்வாயை பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சிவகங்கை மாவட்ட வன அலுவலரிடம் எழுத்துப்பூர்வமாக முன்னனுமதி பெற்று, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது. இவ்வன வட்டாரத்திற்குள் இந்த கால்வாயின் மொத்த தூரம் 472.62 மீட்டர் மற்றும் அகலம் 8 மீட்டர் ஆகும். இவ்வன வட்டாரத்தின் காந்த கோண அளவுகள் மற்றும் தூர விபரங்கள் பின்வருமாறு:–

| தொடர் எண். | நிலையம் (ஆரம்பம் – முடிவு) | காந்த கோண அளவுகள் (பாகையில்) | நீளம்/தூரம் (மீட்டரில்) | கால்வாயின் அகலம் தூரம் (மீட்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | 1 to 2 | $26.66^0$ | 33.87 | 8.00 |
| 2 | 2 to 3 | $52.67^0$ | 78.30 | 8.00 |
| 3 | 3 to 4 | $244.48^0$ | 68.27 | 8.00 |
| 4 | 4 to 5 | $42.61^0$ | 103.83 | 8.00 |
| 5 | 5 to 6 | $250.05^0$ | 127.37 | 8.00 |
| 6 | 6 to 7 | $232.77^0$ | 60.98 | 8.00 |
| | **மொத்தம்** | | **472.62** | |

**உரிமை எண். 3 : 110 கி.வோ. மின்கம்பி**

இவ்வனவட்டாரத்திற்குள் செல்லும் 110 கி.வோ. மின்சார கம்பியானது புக்குறி கண்மாயின் மேற்கு எல்லையான நில அளவை எண்.277–லிருந்து எண்.96, செம்மனூர் கிராமம் வரை கடந்து செல்கிறது. இம்மின்கம்பியின் மொத்த நீளம் 300.00 மீட்டர் ஆகும். தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்கள் சிவகங்கை மாவட்ட வன அலுவலரிடம் முன்னனுமதி பெற்று, பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புப் பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

| தொடர் எண். | நிலையம் (ஆரம்பம் – முடிவு) | காந்த கோண அளவுகள் (பாகையில்) | நீளம் /தூரம் (மீட்டரில்) |
|---|---|---|---|
| 1 | 1 to 2 | $83^0$ | 300.00 |
| | | **மொத்தம்** | **300.00** |

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
28/07/2023